1974 மார்ச் 15]

திரு. என். கே. பழனிசாமி : இதற்காகச் சட்டம் வந்து ஒரு வருஷந் தான் ஆகிறது. இந்தப் பணம் எவ்வாறு செலவு செய்யப்படுகிறது ? அதற்கு ஏதாவது திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த நிதி சமுதாய-சமூக நலக் கல்வி நிலையங்கள் ; வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, சமுதாயத் தேவை கள் ; கேளிக்கை-ஏனைய பொழுதுபோக்கு முறைகள் ; உடல் நலந்தேறி வரும் காச நோயாளிகளுக்கு நலம்பேண் இல்லங்கள் , நலவிடுமுறை விடுதிகள் , விடுமுறை இல்லங்கள ; தொழிலாளர் மனைவியர்க்கு பகுதிநேர வேலை வாய்ப்பு ; பாலர் பள்ளிகள் ; தொழிலாளர்களின் குழந்தைகளுக் குச் சத்துணவளித்தல் ; உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் ; இச்சட்டத்தின் பணிகளுக்காக நியமிக்கப்படும் பணியாளருக் காகும் ஊதியங்கள் ; படிகள் உட்பட இச்சட்டத்தைச் செயற்படுத்தலுக்கு ஆகும் செலவு ; தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வனவும் அவர்களின் சமூக நிலையைச் சீராக்குவதுமானவை என்று வாரியம் கருதுகின்ற பிற நோக்கங்கள் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தலாம் என்று வரையறுக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தொழிலாளர் நல நிதிக்கு தொழிலாளர் களிடமிருந்து வசூல் செய்யும் பங்குத் தொகைக்கு அரசாங்கத்திலிருந்து ரசீது வழங்கப்படுகிறது. இப்போது அவர்களிடையே ஒரு எண்ணம் இருக் கிறது. பணம் கொடுத்ததற்கு எதும் சான்று இல்லாமல் போவதால் அதற்கு ஏதாவது ஒரு முறையை அரசாங்கம் வகுக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அரசிடத்திலிருந்து ஒவ்வொரு நிதி பெறும்போதும் ரசீதும் தரப்படுகிறது. கணக்குகள் வைக்கப்படுகின்றன.

திரு. கே. எ. வகாப் : இப்படிப்பட்ட தொழிலாளர் நல நிதிகள் கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படு கிறதா ? அப்படி இருந்தால் அதனுடைய விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தத் தொழிலாளர் நல நிதியைப் பொறுத்த வரை தொழிற்கூடங்களில் வேலை செய்பவர் களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தொழில் அதிபர்களிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும் தொகைகள் பெற்று காரியங்களை ஆற்றி வருகிறது. அரசு ஐந்து லட்சம் ரூபாய் மானியமாகத் தந்திருக்கிறது.

Employees State Insurance Hospital for Mettur.

* 449 Q.— THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state the stage at which the proposal to construct a hospital under the Employees' State Insurance Scheme at Mettur stands at present ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவமனை கட்டுவதற்கான செயற் குறிப்பு எதும் ஆய்வில் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : மேட்டூர் கெமிகல்ஸ், டெக்ஸ்டைல்ஸ் போன்ற ஏராளமான தொழில்கள் அங்கு இருக்கின்றன. ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அங்கு இனியாவது ஒரு மருத்துவ மனை தொழிலாளாகளுக்காகக் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனியான மருத்துவ மனை இல்லையென்றாலும் மேட்டூர் அப்பர் ; மேட்டூர் லோயர் , கோனூர் மேட்டூர் III ஆகிய மூன்று இடங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் உள்ளன. அதோடு கூட அரசாங்கப் பொது மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்காக 17 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

Domestic power consumption.

* 450Q.— THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have raised the restrictions on domestic power consumption ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) திங்கள் ஒன்றுக்கு 150 யூனிட்டுகளுக்கு மேல் மின்சக்தியைப் பயன்படுத்தினால் சாதாரண கட்டணத்தைப் போல் இரு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும். ஒரு தனிப்பட்ட மீட்டரிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட வீட்டுக்காரர்கள் மின்சக்தியை வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தும் நேர்வில், 1—9—1971 முதல் தொடர்ச்சியான எந்த மூன்று மாத காலத்தில் சராசரியாக பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அடிப்படையில் மின்சக்தி அளவு (quota) முடிவு செய்யப்படும். அந்த அளவுக்கு மேல் அதிகப்படியாக பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : ஒரே மீட்டர் நாலைந்து வீடுகளுக்கு சேர்ந்து இருக்கிறது. 150 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தும்போது இரு மடங்கு கட்டணம் என்று சொன்னால் அதிகமாக ஆவதால் சலுகை கொடுக்கும் முறையில் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படாதவாறு மூன்று மாதத்திற்கான சராசரி பாாதது அப்படியே கொடுக்கப்படுகிறது.